இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 16 | திகதி : 24.11.2024 | விலை : 50.00

# பிறருக்கான சேவை என்பது இறையன்பின் பிரதிபலிப்பு

– திருத்தந்தை பிரான்சிஸ்

**நம் ஒவ்வொரு கவனிப்பும் மற்றும் அக்கறையின் செயற்பாடும், மென்மையான கரிசனையின் வெளிப்பாடும், கருணையின் நடவடிக்கையும் இறையன்பின் பிரதிபலிப்பே.**



நாம் பிறருக்கு சேவை செய்ய முன்வரும்போது, நம் ஒவ்வொரு செயலும் கடவுளன்பின் பிரதிபலிப்பாக இருக்கும் என உரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.கடவுளன்பின் பிரதிபலிப்பாக நாம் அனைவரும் மற்றவர்களுக்கு சேவை செய்ய முன்வரவேண்டும் என்பதை மையமாக வைத்து நவம்பர் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று டுவிட்டர் செய்தியை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிறருக்கு நாம் பணிபுரியக் கற்றுக்கொள்ளும்போது, நம் ஒவ்வொரு கவனிப்பும் மற்றும் அக்கறையின் செயல்பாடும், மென்மையான கரிசனையின் ஒவ்வொரு வெளிப்பாடும், கருணையின் ஒவ்வொரு நடவடிக்கையும் இறையன்பின் பிரதிபலிப்பாக மாறுகிறது என அதில் கூறியுள்ளார். இறை இரக்கம் மற்றும் இறையன்பு வழியாக நாம் பிறருக்குச் சேவை புரிய வேண்டும் என்பதை இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்கிறோம் எனவும், இறையன்பு என்பது பிறரன்பின் வழியாகத்தான் செயலாற்ற முடியும் எனவும், மனித சமுதாயத்திற்குச் சேவை புரிவதில் மனிதர் தம்மையே ஈடுபடுத்தும்பொழுது அவர்கள் இறைபணியை எடுத்துச் செல்கின்றனர் எனவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார் திருத்தந்தை பிரான்சிஸ் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## “மாறிய எனது பாதை மாற்றியவர் யாரோ” நூல் அறிமுக நிகழ்வு



அமலமரித்தியாகிகள் சபை **அருட்தந்தை செல்வரட்ணம்** அவர்களின் **“மாறிய எனது பாதை மாற்றியவர் யாரோ”** நூல் அறிமுக நிகழ்வு 15ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத் தூது கலையகத்தில் நடைபெற்றது. அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தையும் மாங்குளம் நலனோம்பு மைய இயக்குநருமான அருட்தந்தை அன்புராசா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.**ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்** அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து நூலை வெளியிட்டுவைக்க, நூலுக்கான ஆய்வுரையை யாழ் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், உளவளத் துணையாளரும் எழுத்தாளருமான திருமதி. கோகிலா மகேந்திரன் மற்றும் நிகழ்வின் சிறப்பு விருந்தினரான யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சற்குணராசா ஆகியோர் வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் அமலமரித்தியாகிகள் சபை யாழ். மாகாண முதல்வர் அருட்தந்தை ஜெயந்தன் பச்சேக், திருக்குடும்ப கன்னியர் மட யாழ். மாகாண முதல்வி அருட்சகோதரி தியோபின் குருஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர். இந்நூல் அருட்தந்தையின் வாழ்க்கைக் கதையோடு ஆரம்பித்து அதனூடான படிப்பினைகளை ஆன்மீக, உளவியல் சிந்தனைகளாகத் தொகுத்து பிரபஞ்ச ஆன்மீகத்தினுடான இவரின் வாழ்வின் இறுதி அத்தியாயத்தை வெளிக்கொணர்வதாக அமைந்துள்ளது.

## சுகாதார வைத்தியப் பணிப்பாளர் குழு ஆயருடனான சந்திப்பு



வடமாகாண சுகாதார வைத்தியப் பணிப்பாளர் வைத்தியர் சமன்பத்திரன அவர்கள் தலைமையிலான குழுவினர் யாழ். **ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்** அவர்களை 13ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பில் வடமாகாண சுகாதார வைத்திய பிரிவினரால் டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு யாழ். மறை மாவட்டப் பங்குகளில் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கு பங்குத்தந்தையர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு வட மாகாண சுகாதார வைத்தியப் பணிப்பாளர் அவர்கள் யாழ். மறை மாவட்ட ஆயர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். இச்சந்திப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திரு. கேதீஸ்வரன், பிராந்திய தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் எமில், யாழ். சுகாதாரப் பணிமனை வைத்தியர் தவரூபன், மற்றும் யாழ்ப்பாண பொது சுகாதார அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## திருத்தந்தையின் மறைபரப்பு சபை இயக்குநர்களின் செயற்திட்டக் கூட்டம்



திருத்தந்தையின் தேசிய மறைபரப்பு சபையால் முன்னெடுக்கப்பட்ட மறைமாவட்ட இயக்குநர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கான வருடாந்த செயற்திட்டக் கூட்டம் 08,09ஆம் திகதிகளில் குருநாகல் கரித்தாஸ் ஜெனசெத்த நிறுவனத்தில் நடைபெற்றது.தேசிய இயக்குநர் அருட்தந்தை பசில் றொகான் பெர்னாண்டோ தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் சபையின் கடந்தகால எதிர்கால செயற் திட்டங்கள் பற்றியும் எதிர்வரும் யூபிலி ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

இக் கூட்டத்தில் மறை மாவட்ட இயக்குநர்கள் மற்றும் செயற் குழு உறுப்பினர்களென 80 பேர் பங்கு பற்றியதுடன் யாழ். மறை மாவட்டத்திலிருந்து இயக்குநர் அருட் தந்தை எயின்சிலி றொஷான் அவர்களுடன் நான்கு செயற் குழு அங்கத்தவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## புனித மடுத்தீனார் சிறிய குருமட வருடாந்தத் திருவிழா



யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட வருடாந்த திருவிழாவும் புனரமைப்பு செய்யப்பட்ட குருமட திறப்பு விழாவும் கடந்த 10ஆம் திகதி குருமட அதிபர் அருட் தந்தை செல்வரட்ணம் அவர்களின் தலைமையில் நடைபெற்றன. கொடியேற்றலுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் யாழ். ஆயர் **பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்** ஆண்டகைகலந்து கொண்டு அழகிய தோற்றத்துடன் புனரமைப்பு செய்யப்பட்ட குருமடத்தை ஆசீர்வதித்து திறந்து வைத்து விழாத் திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

தொடர்ந்து குருமட கேட்போர்கூடத்தில் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் குருமட மாணவர்களின் படைப்பான ‘தேன் அரும்பு’ கையெழுத்து நூலின் 16ஆவது இதழ் வெளியிடப்பட்டதுடன் சிறப்பு நிகழ்வாக ‘True Love of Life and the Master Maid’ ஆங்கில நாடகமும் மேடையேற்றப்பட்டன.

இந்நாளை சிறப்பித்து அன்று மாலை விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றதுடன் இந்நிகழ்வுகளில் யாழ். குருமுதல்வர் அருட் தந்தை ஜெபரட்ணம், ப.2

## யாழ் கத்தோலிக்க மருத்துவர் அமைப்பின் சிறப்புத் திருப்பலி



யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க மருத்துவர் அமைப்பின் சிறப்புத் திருப்பலி (WHITE MASS) யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் கடந்த ஞாயிறு மாலை யாழ் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலிலும் பேராலயப் பங்குத் தந்தை அருட்தந்தை ஜெரோ செல்வநாயகம் அவர்களின் ஒத்துழைப்போடும் இந்நிகழ்வு இராவுணவுடன் இனிதே நிறைவுற்றது.

## மானிப்பாய் திருக்குடும்பக் கன்னியர் மட பவளவிழா



மானிப்பாய் திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆரம்பிக்கப்பட்டதன் 75வது ஆண்டு பவள விழா நிகழ்வு கடந்த 11ஆம் திகதி அங்கு நடைபெற்றது. அருட்சகோதரிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் மானிப்பாய் பங்குத்தந்தை அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா அவர்கள் கலந்து சிற்றாலயத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுத்தார். தொடர்ந்து திருக்குடும்ப சிறுவர்கள், இளையோர், பொதுநிலை அங்கத்தவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் திருக்குடும்பக் கன்னியர் மட யாழ். மாகாண முதல்வி அருட்சகோதரி அனற் தியோபின் குரூஸ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததுடன் உரோமிலுள்ள சபைத்தலைவி அருட்சகோதரி அனா மரியா அவர்களின் வாழ்த்துச் செய்தியையும் வாசித்தார். சபையின் மாகாண பொருளாளர் அருட்சகோதரி மறிஸ்ரெலா சூசைப்பிள்ளை, ஆலோசக அருட்சகோதரிகள் மெற்றில்டா வசந்தி பிரான்சிஸ், அன்ரனீற்றா மார்க், விஜயா ஜோசப், புறோத்மேரி மரியானந்தம், சபை அருட்சகோதரிகள், நல்லாயன் சபை அருட்சகோதரிகள், திருக்குடும்பப் பிள்ளைகள், இளையோர், பொதுநிலை அங்கத்தவர்கள், பங்கு மக்கள், பாடசாலை சமூகத்தினரெனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## எமது எண்ணம்

### புதிய மாற்றம் நீர்த்துப்போகக் கூடாது

மாற்றத்தை எதிர்நோக்கிய புதிய கலாசாரத்தை எதிர்பார்க்கும் தேர்தல் முடிவு மக்களின் எண்ணத்தின்படி கிடைத்துள்ளது. மாற்றத்துக்கான பச்சைக்கொடி மக்களால் காட்டப்பட்டுள்ளது என்ற ஒரு வெளிப்படையான உண்மை இங்கு காணப்படுகிறது."திசைக் காட்டி" க்கு இம்முறை போதுமான அளவு அரச அதிகாரத்தை மக்கள் வழங்கியுள்ளனர். அதேநேரம் தமிழர் வழங்கிய வாக்குகளை அனுரகுமார திஸா நாயக்கா தலைமையிலான அரசாங்கம் உரியமுறையில் பயன்படுத்த வேண்டும். வெறுமனே கொழும்பு அரசியலுடன் ஈழத் தமிழர்களின் உணர்வுகளைக் கரைத்துவிடலாம் என்ற எண்ணத்துடன் செயற்படக்கூடாது. சுயநிர்ண உரிமை என்பது தமிழர்களின் அரசியல் விடுதலை என்பதை உணரத் தலைப்பட வேண்டும். இதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய மற்றுமொரு பாடமும் உள்ளது. அதுதான் முழு நம்பிக்கையுடன் ஒரு விதமான சோதனையை பரிசீலித்துப் பார்க்க வேண்டிய காலமும் இதுவாகும். 76 வருட காலங்களாக பரம்பரை பரம்பரையாக ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் திருட்டு, ஊழல் மற்றும் மோசடி போன்றவற்றை எமது நாட்டு அரசியலில் புற்றுநோயாக வளர்த்து வந்தமையை நாம் நன்கு அறிவோம்.

இத்தனை வருடங்களாக ஆட்சியில் இருந்த அரசியல் கட்சிகளில் அரசியல் புரிந்து ஊழலில் சிக்குப்படாத ஒரு கட்சியாக அனுரகுமாரவின் தேசிய மக்கள் சக்தி கட்சி பார்க்கப்படுகிறது. ஜனநாயக நிறுவனங்களான அரச சேவை போன்றவற்றை மூழ்கடித்துள்ள ஊழல் மற்றும் மோசடி நடைமுறைகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். அதில் பங்கேற்காத ஒரு குழு மூலமே அதை அகற்ற ஆரம்பிக்கலாம். எனவே ஒரு புதிய கலாசாரத்தை மேற்கொள்ள வேறு எந்தக் கட்சியும் தற்போது இல்லை என்பது தெளிவாகிறது. இதுவரையில் ஆட்சி அதிகாரங்கள் வகிக்காமல் இருந்தமையே திசைக்காட்டியை மக்கள் தேர்வு செய்ய மற்றுமொரு காரணம் என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

ஒரு காலத்தில் இடதுசாரிக் கொள்கைகள் காரணமாக அனுர தலைமையிலான குழுவுக்கு வாக்களிக்கத் தயங்கிய மக்கள் மனதில் இடதுசாரி சிந்தனைகளால் பொருளாதார வளர்ச்சி காண முடியும் என்ற நம்பிக்கையை அதே அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி விதைத்தமையே இந்த வெற்றிக்கான அஸ்திவாரமாக இருந்தது. பிரசாரப் பீரங்கிகள் மாத்திரமே என நினைத்த மக்கள் மாற்றத்தின் வெளிப்பாடாக அவர்களைத் தெரிவு செய்யும் அளவிற்கு தேசிய மக்கள் சக்தியினரின் கொள்கைகள் பொருந்தின. தொடக்க காலங்களில் இருந்தே தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பியின் பிரசார கூட்டங்களுக்கு அதிகளவிலான கூட்டம் அலை மோதினாலும் கூட அது போன்றதொரு பெறு பேறு தேர்தல்களில் அவர்களுக்குக் கிடைத்ததில்லை. தலைகீழான ஒரு நிலையே காணப்பட்டது. ஆக இலங்கை மக்கள் இடதுசாரிக் கொள்கைகளால் மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற எண்ணத்துடன் தங்கள் பெறுமதிக்குரிய வாக்குகளை மக்கள் வழங்கியுள்ளனர். எனினும் நாட்டின் ஸ்திரத்தன்மையை விரும்பாத சில அரசியல் தலைவர்கள் அந்தக் கொள்கைகளையும் நோக்கங்களையும் தகர்த்த தெறிய படாத பாடுபட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றத்திற்குப் புதியவர்கள் வேண்டாம். அனுபவம் வாய்ந்தவர்களால் மாத்திரமே நாடு சீரான பாதையில் பயணிக்கும் எனவெல்லாம் கூறிய சில தலைவர்களுக்கு அனுபவம் கொண்டவர்கள் நாடாளு மன்றத்தில் வன்முறையில் ஈடுபட்ட சம்பவங்கள் கண்களுக்கு தெரியவில்லையா? குறித்த காலப்பகுதிகளில் நாடாளுமன்றில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு இது வரையில் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க கூறியதைப் போலவே "நாடாளுமன்றத்தைச் சுத்தம் செய்யும் சிரமதானத்தில்" மக்கள் சிறப்பாகச் செயற்பட்டுள்ளனர். மக்கள் மாற்றத்தைக் கோரி மேற்கொண்ட இந்த சிரமதானம் அரசியல் வாக்குறுதிகளுக்கு அப்பாற்பட்டு ஜனநாயகத்தைக் காப்பாற்றக் கூடிய விடயங்களை அனுர அரசாங்கம் மேற் கொள்ள வேண்டும். அவையும் மறந்து விடக் கூடாத மாற்றங்கள் ஆகும்.

பிரதானமாக முன்னைய ஆட்சியாளர்கள் விட்ட தவறுகள் தொடர அனுமதிக்கப்பட்டால் மக்கள் விரும்பிய இந்த மாற்றம் நீர்த்துப் போய்விடும். 2022 இல் இடம்பெற்றது போன்று மற்றுமொரு மக்கள் கிளர்ச்சிக்கு இடமளிக்கவும்கூடாது.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

## நமது இதயங்களில் நுழைந்து வாழ்க்கையை மாற்றும் தூய ஆவியார்

### – திருத்தந்தை பிரான்சிஸ்



செபம் நமது இதயத்தைக் கடவுளுக்காக திறக்கின்றது, தூய ஆவியார் செபத்தின் வழியாக நம்முள் நுழைந்து நமது வாழ்க்கையை மாற்றுகின்றார் என்றும், நம்பிக்கையை மீண்டும் மக்கள் மனதில் உருவாக்க செபிப்பது மிக முக்கியமானது என்றும் இரண்டு குறுஞ்செய்திகளின் வழியாகத் தனது கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த18 ஆம்திகதிதிங்கட்கிழமை ஹேஸ்டாக் செப ஆண்டு என்ற தலைப்பில் வெளியிட்ட டுவிட்டர் குறுஞ்செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செபிக்கும்போது நமது இதயமானது தூய ஆவியானவருக்கான இடத்தை கொடுக்கின்றது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

முறைகேடுகளால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும்தப்பிப்பிழைத்தவர்களுக்கான செப நாளைக் கொண்டாடும் இத்தாலியின் தலத்திருஅவையோடு தான் ஒன்றிணைவதாகவும், முறைகேடுகள் என்பது நம்பிக்கைத் துரோகம் வாழ்க்கையின் துரோகம். எனவே நம்பிக்கையை மீண்டும் உருவாக்கச் செபிப்பதுமிக முக்கியமானது என்றும் தனது முதல் குறுஞ்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

செபம் நமது இதயத்தைக் கடவுளுக்காகத் திறக்கின்றது, தூய ஆவியார் செபத்தின் வழியாக நம்முள் நுழைந்து நமது வாழ்க்கையை மாற்றுகின்றார். எனவே செபிக்கவேண்டும், நமது இதயத்தைத் திறக்க வேண்டும், தூய ஆவியாருக்கு இதயத்தில் இடமளிக்க வேண்டும் என்று தனது இரண்டாவது குறுஞ்செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

## வறியோர்களுடன் மதிய விருந்துண்ட திருத்தந்தை பிரான்சிஸ்

எட்டாவது உலக வறியோர் நாளை முன்னிட்டு வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தூய ஆறாம் பவுல் அரங்கத்தில் வறியோர் ஏறக்குறைய 1300 பேருடன் மதிய உணவு உண்டார்.

நவம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை உரோம் உள்ளூர் நேரம் காலை 10.00 மணியளவில் இந்திய இலங்கை நேரம் பிற்பகல் 2.30 மணியளவில் அகில உலக வறியோர் தினத்திற்கான திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருப்பலிக்கு முன்னதாக ஃபாம்வின் வீடற்றவர்களுக்கான கூட்டமைப்பின் (FHA) உதவி யால் யூபிலி ஆண்டை முன்னிட்டு 13 நாடுகளில் உள்ள வர்களுக்கு இலவச வீடுகள் வழங்கும் திட்டத்திற்காக 13 சாவிகளை ஆசீர்வதித்தார். 13 நாடுகளில் ஒன்றாக இருக்கும் சிரியாவிற்கு 13 இலவச வீடுகள் கட்டித்தருவதற்கான நிதி உதவியானது திருப்பீடத்திலிருந்து நேரடியாக வழங்கப் பட உள்ளது.

UnipolSai என்னும் அமைப்பின் தாராள நன்கொடை மற்றும் பலரது முயற்சியின் விளைவாகவும் இந்த புதிய செயற்திட்டமானது போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வர இருக்கும் யூபிலி ஆண்டு எதிர்நோக்கின் அடையாளமாக இருக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் நடைபெற உள்ளது.

## புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் பரதநாட்டிய போட்டியில் முன்னிலையில்



பாடசாலைகளுக்கிடையே தேசிய ரீதியில் நடைபெற்ற இயல், இசை, நாடகப் போட்டி கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் பங்குபற்றிய யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களான செல்வன் கிசோன் பிரிவு இரண்டு தனி நடனப் போட்டியில் முதலாம் இடத்தையும் செல்வன் டிலைனோ கீழ் பிரிவு தனி நடனப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

### புனித மடுத்தீனார்....

(1ம் பக்கத் தொடர்ச்சி..)

குருமட மாணவர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதர்கள், ஆசிரியர்களென பலரும் கலந்துகொண்டனர்.

யாழ். மறைமாவட்டத்தின் இதயமாக விளங்கும் 155 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்குருமடம் தமிழ் மறை மாவட்டங்களில் பணியாற்றிய பணி யாற்றிக் கொண்டிருக்கின்ற ஆயர்களையும் ஆயிரக்கணக்கான குருக்களையும் உருவாக்கிவருகின்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்குருமடத்தின் புனரமைப்புப் பணிக்கான முற்று முழுதான நிதி உதவியை ஆயரின் ஒழுங்குபடுத்தலில் திருத்தந்தையின் நிதியம் வழங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உருத்திரபுரம் பங்கில் இரத்ததான முகாம்

உருத்திரபுரம் பங்கில் இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாம் கடந்த 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உருத்திரபுரம் புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஜோன் கனீசியஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 20வரையான குருதிக்கொடையாளர்கள் கலந்து இரத்ததானம் வழங்கியிருந்தார்கள்.

## மரியாயின் சேனை பிரசீடிய விழா

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட மரியாயின் சேனை பிரசீடிய விழா 10ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்த குமார் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருப்பலியும் தொடர்ந்து ஒன்றுகூடலும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட மரியாயின் சேனை கொமிசிய இயக்குநர் அருட்தந்தை சகாயநாயகம், ஆலய ஆன்மீகக் குரு அருட்தந்தை நீக்கிலஸ், மறைமாவட்ட கொமிசிய நிர்வாக உறுப்பினர்கள், பங்கின் பத்திச்சபைப் பிரதிநிதிகளெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் ஒளிவிழா

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒளிவிழா கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு. லெனின்குமார் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலியும் தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன.

திருப்பலியைப் பேராலய உதவி பங்குத்தந்தை அருட்தந்தை கமல்ராஜ் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்துடன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற கலைநிகழ்வில் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக வரவு விரிவுரையாளரும் அமலமரித் தியாகிகள் உயர்கல்வி நிலைய இயக்குநருமான அருட்தந்தை ஜீவேந்திரா போல் அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ். கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி. மரியநாயகம் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

அரங்க நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் ஒளிவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப் பட்டன.

# இந்தியாவைக் கடந்து இலங்கை பிறிக்ஸில் இணைய முடியுமா?

**மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் சார்ந்த சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கடன்களைப் பெற்றுள்ள நிலையில் பிறிக்ஸில் இணைந்து பொருளாதாரத்தை மீட்கலாம் என்ற கொழும்பின் கனவு கடினமானது**

அ.நிக்ஸன்

ரஷ்ய - சீன அரசுகளை மையப்படுத்திய பிறிக்ஸ் பொருளாதாரக் கூட்டில் இணைவதற்கு ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதியாக இருந்த போதே விருப்பம் வெளியிடப்பட்டிருந்தது. 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் பிறிக்ஸில் இணையத் தூண்டியதா என்ற கேள்விகளுக்கு அப்பால் இந்தியா பிறிக்ஸில் முக்கிய பங்குதாரராக இருப்பதும் காரணமாக இருக்கலாம்.

ஆனால் இந்திய அரசு இது வரையும் கருத்து எதனையும் வெளியிடவில்லை. பிறிக்ஸில் இணைவதைவிடவும் தான் சொல்வதையே இலங்கை கேட்க வேண்டும் என்ற நிலைப்பாடுதான் இந்தியாவிடம் உள்ளது என்ற தொனி புதுடில்லியின் அமைதியில் தெரிகிறது.

ஆனால் சீன - இந்திய அரசுகள் முரண்பாட்டில் உடன்பாடாக பிறிக்ஸில் இயங்குவது போன்று சீன - இந்திய அரசுகளுடன் இலங்கை சமாந்தரமாகப் பயணிக்க முடியும் என்ற நம்பிக்கை இலங்கைக்கு உண்டு. இந்தியாவைப் போன்று அமெரிக்காவையும் மறு கையால் சமாளிக்க முடியும் எனவும் இலங்கை நம்புகின்றது போலும்.

குறிப்பாக சிங்கள அரசியல் தலைமைகளிடம் அப்படியான கருத்து உண்டு. பிறிக்ஸ் உறுப்புரிமைக்கு அனுரகுமார திஸாநயக்க அரசாங்கம் விண்ணப்பித்துள்ளது. ஆகவே ரணில் எடுத்த அந்த முயற்சியைத் தொடருவதன் மூலம் கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் இலங்கையின் அந்த ஒற்றுமையான கருத்து பகிரங்கப்படுகிறது.

அனுரகுமார திஸாநாயக்கா ஜனாதிபதியாக தெரிவாவதற்கு முன்னரே அமெரிக்கா, கனடா போன்ற மேற்கு நாடுகளுக்கும் இந்தியா சீனா போன்ற நாடுகளுக்கும் பயணம் செய்திருந்த போதே மேற்படி உடன்பாடு ஒன்றுக்கு ஜேவிபியை மையமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி வரும் என்று இப்பத்தியில் கணிப்பிடப்பட்டிருந்தது.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் வெளியிடப்பட்ட விரும்பம் ஒன்றை ஜேவிபி அரசாங்கம் செயற்படுத்தியுள்ளது என்றால் கட்சி அரசியலைவிடவும் “இலங்கை அரசு” என்ற கட்டமைப்பின் கொள்கையும் அதன் தீர்மானமும் இங்கே முக்கியமானது என்ற முடிவுக்கு வரலாம்.


2009 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிறிக்ஸ் பொருளாதாரக் கூட்டமைப்பு தற்போது மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளையும் உறுப்பு நாடுகளாக்கி மேலும் உலகப் பொருளாதாரத்தில் 35 சதவித பங்கைத் தம்வசப் படுத்தியுள்ளன.

அமெரிக்க டொலருக்கு எதிராகப் புதிய நாணயம் ஒன்றை தெற்காசியாவில் அறிமுகப்படுத்த 2023 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற பிறிக்ஸ் மாநாட்டுக்கு முன்னரே பேசப்பட்டிருந்தாலும் அதன் சாத்தியப்பாடுகளில் ஏற்படவுள்ள தடைகள் பற்றிய உரையாடல்கள் இன்னமும் தொடருகின்றன.

ஆனாலும் டொலருக்கு எதிராக அப்படியொரு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் அதனால் இலங்கைக்கு எழக்கூடிய ஆபத்துக்கள் பற்றியும் சிங்கள அரசியல் தலைவர்கள் அறியாதவர்கள் அல்ல. ஆனால் பிறிக்ஸில் இணையும் விவகாரத்தில் சீனாவை விடவும் இந்தியாவை நம்பியே இலங்கை இயங்குகின்றது என்றால் அது மிகையாகாது.

ஏனெனில் பிறிக்ஸில் இந்தியா தொடர்ந்தும் இருக்குமா அல்லது அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கூட்டில் இருக்குமா என்பதற்கு அடுத்த ஒரு ஆண்டில் முடிவுகள் தெரியும். குறிப்பாக டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவான சூழலில் இந்தியாவைப் பொறுத்தவரை அமெரிக்க ஆதரவுடன் பயணிக்க வேண்டியதொரு கட்டாயச் சூழல் இல்லாமலில்லை.

இப் புவிசார் அரசியல் - பொருளாதாரப் பின்னணி இலங்கைக்குப் புரியாததல்ல. இதன் காரணமாகவே பிறிக்ஸில் உறுப்புரிமைக்கு விண்ணப்பித்தமை பற்றி அமைச்சர் விஜிதஹேரத் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். அந்த உறுப்புரிமை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று வெளியான செய்தியை கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகம் மறுத்ததன் பின்னணியிலும் அரசியல் - பொருளாதார நலன்கள் உண்டு.




ஆக “இலங்கை அரசு” என்ற கட்டமைப்பு சிங்கள அரசியல் நலன்சார்ந்து இயங்குகின்றது என்பதற்கு ரணிலின் அணுகுமுறையைப் பின்பற்றுகின்ற அனுர அரசாங்கத்தின் போக்கில் இருந்து தெளிவாகிறது.

1980 களில் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பையும் அந்த நாடாளுமன்ற முறையையும் எதிர்த்துப் போராட்டம் நடத்தி இரத்தக் களரியை ஏற்படுத்தியிருந்த ஜேவிபி, அதன் பின்னர் ஜனநாயக வழிக்கு வருவதாகக் கூறிக் கொண்டு 1994 இல் முதன் முறையாக நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியல் மூலம் பிரதிநிதி ஒருவரை அனுப்பியிருந்தது.

இன்று இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதியாகவும் அந்த ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தின் பிரதான ஆட்சியாளராகவும் அரசியல் ரீதியாகத் தரமுயர்ந்துள்ள பின்னணியில் பிறிக்ஸ் உறுப்புரை பற்றிப் பேச ஆரம்பித்திருக்கின்றனர்.

ரஷ்யாவின் கசான் நகரில் ஒக்டோபர் 23-24 ஆம் திகதிகளில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் இலங்கை உறுப்புரிமைக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

பிரேசில், ரசியா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட பிறிக்ஸ் நாடுகளை இலங்கை ஏற்கனவே அணுகி அதன் விண்ணப்பத்திற்கான ஆதரவைப் பெற்றுக் கொண்டதாக ஹேரத் உறுதிப்படுத்தினார்.

“ஐ.நா. சாசனத்தின் கட்டமைப்பிற்குள் பலப்படுத்தப்பட்ட மற்றும் உள்ளடக்கிய பலதரப்புகளின் மூலம் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பு, அமைதி மற்றும் வளர்ச்சிக்கான அபிலாஷைகளை நனவாக்குவதற்கு பிறிக்ஸ் ஒரு பயனுள்ள கூட்டாண்மையாக அமையும் என்று அமைச்சர் விஜித ஹேரத் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆகவே பொருளாதார நெருக்கடிகள் மற்றும் கடன்களை மறுசீரமைக்கும் முயற்சிகளில் இலங்கை சிக்கித் தவிக்கும் நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இலங்கைத்தீவு தனது பொருளாதாரத்தை மீட்டெடுக்க முற்படுகையில், பிறிக்ஸ் உறுப்புரிமையை அதிக சர்வதேச ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்கான பாதையாக அநுர அரசாங்கம் நம்புகின்றது என்றும் பொருள் முடியும்.

ஆனால் ட்ரம்பின் மீள் வருகையின் பின்னரான சூழலில் தெற்காசியப் பிரந்தியத்திலும் இந்தோ - பசுபிக் பிராந்தியத்திலும் ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள் அல்லது அணுகுமுறைகளில் இந்தியா எதிர்கொள்ளவுள்ள சவால்கள் இலங்கையின் இந்த அணுகுமுறையில் சிக்கல்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

**ட்ரம்பின் மீள் வருகையின் பின்னர் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள உலக அரசியல் நெருக்கடியைப் புதுடில்லி எப்படிக் கையாளப் போகின்றது என்பதை மையமாகக் கொண்டே இலங்கையின் அரசியல் பொருளாதார நிலை அமையும்**

சில உலக வல்லரசுகளின் கொடுமைப்படுத்துதல் மற்றும் வற்புறுத்தல் நடவடிக்கைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, தங்கள் சொந்த புவிசார் அரசியல் நிகழ்ச்சி நிரலால் உந்தப்பட்டு, வளர்ச்சி மற்றும் உலகளாவிய தெற்கின் பொதுவான நலன்களைப் பாதுகாப்பதில் பிறிக்ஸ் ஒன்றிணைக்கும் சக்தியாக உருவகப்படுத்தப்பட்டது.

பிறிக்ஸ் உறுப்பு நாடுகள் புதிய வளர்ச்சி வங்கி, புதிய தொழில்துறைப் புரட்சிக்கான கூட்டாண்மை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரக் கூட்டாண்மை கட்டமைப்புப் போன்ற வழிமுறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பிறிக்ஸ் நாடுகள் ஏற்கனவே உலக வளர்ச்சியில் 50 சத வீதத்திற்கு மேல் பங்களித்துள்ளன. இப்போது பிறிக்ஸ் உறுப்பு நாடுகள் உலக மக்கள் தொகையில் 45 சதவீதத்தையும், உலகப் பொருளாதார உற்பத்தியில் கிட்டத்தட்ட 35 சதவீதத்தையும், உலக வர்த்தகத்தில் 20 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உலகளாவிய வளர்ச்சியை மேலும் முன்னெடுப்பதில் அதன் பங்கைக் கவனிக்காமல் இருக்க முடியாது.

இப் பின்னணியில் இலங்கையும் இணைய முற்படுவதற்குக் காரணங்கள் இருந்தாலும் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பைப் பொருளாதார ரீதியாகப் பலப்படுத்துவதே பிரதான நோக்கமாகும்.

ஆனால் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் அந்த நாடுகள் சார்ந்த உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் பரிஸ்க்ளப் ஆகியவற்றிடம் கடன்களைப் பெற்றுள்ள நிலையில் பிறிக்ஸ் பொருளாதாரக் கூட்டில் இலங்கை இணைவது எங்ஙனம் சாத்தியமாகும் என்ற கேள்விகள் விஞ்சியுள்ளன.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் பரிஸ்க்ளப் ஆகியவற்றிடம் பெற்ற கடன்களை இலங்கை 2028 ஆம் ஆண்டுக்குள் மீளச் செலுத்த வேண்டும். அதில் சில கடன்கள் நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் அமைந்தவை இந்த நிலையில் பிறிக்ஸில் இணைந்து பொருளாதார வளர்ச்சியை எற்படுத்தலாம் என்ற இலங்கையின் கனவு கடினமானது.

ஆனால் இலங்கை, சீனாவுக்கும் முக்கியமானது இந்தியாவுக்கும் முக்கியமானது. சிறிய நாடு என்ற செல்லப்பிள்ளை உணர்வு சீனா இந்தியா போன்ற நாடுகளுக்கு மாத்திரமல்ல அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளிடமும் உண்டு. இது ஒன்றுதான் இலங்கை பெற்றுள்ள ஒரேயொரு சாதகமான சூழல்.

ஆனால் ட்ரம்பின் மீள் வருகையின் பின்னர் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள உலக அரசியல் நெருக்கடியை புதுடில்லி எப்படிக் கையாளப் போகின்றது என்பதை மையமாகக் கொண்டே இலங்கையின் அரசியல் - பொருளாதார நிலை அமையும். இலங்கை பிறிக்ஸில் இணைய சீனா பரிந்து பேசும் என்று நம்புவதற்கில்லை. இந்தியாவைப் போன்று இலங்கையை நேரடியாகக் கட்டுப்படுத்தவே சீனாவும் விரும்பும்.

ஆகவே சர்வதேச அரங்கில் இதுவரை காலமும் இந்தியா கையாண்டு வந்த இரண்டு வகையான இராஜதந்திர உறவை அதாவது ரஷ்ய - சீன கூட்டையும் ஐரோப்பிய மற்றும் மேற்கு நாடுகளுடனான கூட்டையும் ஒருங்கு சேரக் கையாள முடியாது. ஆக இந்த விவகாரத்தில் இந்தியா எடுக்கப்போகும் முடிவை மையமாகக் கொண்டே இலங்கையின் பிறிக்ஸ் கனவுக்கும் இடம் கிடைக்கும்.

அதேநேரம் இந்தியாவைப் பகைத்துக் கொண்டும் இலங்கை சீனாவுடன் உறவைப் பேணவும் முடியாது. பிறிக்ஸில் உறுப்புரிமை பெறவும் முடியாது. ஆகவே அனுர அரசாங்கத்துக்கு இது பெரும் சவாலாகும்.

# அகவொளி நாயகன் அமரர் அருட்பணி. இராஜநாயகம் அடிகளாரின் வாழ்வும் பணியும்

**"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"**
**(2 திமோ, 4 : 7)**



இளவாலை புனித யாகப்பர் ஆலய திரு அவையின் இரண்டாவது அருட்பணியாளராகத் திகழ்ந்து யாழ்ப்பாணம், மன்னார் மறை மாவட்டங்களின் குருவாகப் பணியாற்றி அகவொளி குடும்ப வளத்துணை நிலைய ஸ்தாபகராகவும் இயக்குநராகவும் இறைபணியுடன் கூடிய சமூகப் பணிகளை ஆற்றி தனது எழுபத்தைந்தாவது வயதில் அருட்பணிகளின் ஐம்பதாவது ஆண்டில் தடம்பதித்த அருட்பணியாளர் S.J.இராஜநாயகம் அடிகளாரின் விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டினை நினைவு கூருகின்றோம்.

இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தின் கிறிஸ்தவ விசுவாசக் குடும்பத்தின் திரு.திருமதி செபஸ்ரி மரியை தம்பதிகளின் ஏழாவது செல்லப்பிள்ளையாக 1948ம் ஆண்டு யூன் மாதம் 10ம் திகதி அமரர் அருட்பணி செபஸ்ரி யேசு இராஜநாயகம் அடிகளார் அவதரித்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியிலும் கிறிஸ்தவ ஒழுக்க விழுமியங்களுடன் பெற்றுக் கொண்டார்

கிறிஸ்தவ விசுவாச குடும்பத்தின் ஆன்மீக வழிகாட்டல்கள் மூலம் இறை அழைப்பை ஏற்று 1962இல் யாழ்ப்பாணம் புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் இணைந்து தனது உயர்கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்றுத் தேர்ச்சியடைந்தார். 1966ம் ஆண்டு அன்றைய யாழ்ப்பாண ஆயராக விளங்கிய பேரருட்திரு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் பணிப்பின் பேரில் இந்தியாவில் திருச்சிராப்பள்ளி புனித பவுல் குருமடத்தில் மூன்று வருட மெய்யியல் கல்வியை நிறைவு செய்து தாயகம் திரும்பி 1969 முதல் 1970 வரை தனது குருத்துவ உருவாக்கல் பயிற்சிக்காக யாழ் மறைமாவட்ட ஆளுகைக்குட்பட்ட மன்னார் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் இறைபணியாற்றித் தனது அர்ப்பண வாழ்வை உறுதி செய்தார்.

மீண்டும் திருச்சிராப்பள்ளி புனித பவுல் குருமடத்தில் 1970 - 1974 வரை இறையியல் கல்வியை சிறப்புடன் கற்றுத் தேர்ந்து தாய்மண் திரும்பினார். 1974ம் ஆண்டு இளவாலை புனித யாகப்பர் ஆலய திருஅவையினர் மகிழ்வுற ஆலய வளாகத்தில் புதிதாய் அமைக்கப்பட்ட அரங்கில் 1974ம் ஆண்டு வைகாசி மாதம் 2ம் திகதி அன்றைய யாழ் ஆயர் பேரருட்திரு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் திருக்கரங்களினால் திராட்சையூரின் இரண்டாவது அருட்பணியாளராக S.J. இராஜநாயகம் அடிகளார் திருநிலைப்படுத்தப்பட்டார். அதே ஆண்டு அதே மாதம் 17ம் திகதியன்று புனித மருதமடு அன்னை எமது பங்கிற்கும் தரிசனம் தந்து புதிய அருட்பணியாளரையும் திருஅவையினரையும் ஆசீர்வதித்தமை குறிப்பிடத்தக்க வரலாற்றுப்பதிவாகும்.

1974ம் ஆண்டு ஆவியின் அருட்பொழிவின் வல்லமையுடன் மன்னார் மாவட்டத்திற்கு தனது கன்னிக் குருத்துவப் பணிகளை ஆற்றத் தயாரானார். 1974 - 1975 வரை மன்னார் புனித செபஸ்ரியார் ஆலயத்தின் உதவிப் பங்குத் தந்தையாக இறைபணியாற்றினார். மீண்டும் யாழ் மண் திரும்பி 1975 யூன் முதல் ஒக்டோபர் வரை பேராலய உதவிப் பங்குத் தந்தையாக ஆன்மீகப் பணியாற்றினார். அதன்பின்பு கிளிநொச்சி மண்ணின் புனித திரேசாள் ஆலய உதவிப் பங்குத்தந்தையாகவும் 1976 முதல் 1979 வரை உருத்திரபுரம் பங்குத்தந்தையாகவும் ஆரோபணம் ஆண்கள் இல்ல அதிபராகவும் திறம்படப் பணியாற்றினார்.

மீண்டும் மன்னார் மாவட்ட ஆன்மீகத் தேவை கருதி 1979 முதல் 1984 வரை உயிலங்குளம் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய வேளையில் 1981ம் ஆண்டு யாழ் மறை மாவட்ட ஆளுகைக்குட்பட்டிருந்த மன்னார் தனி மறைமாவட்டமாக உதயமாகி அதன் முதல் ஆயராக பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் காலத்தில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தின் முதல் இயக்குநராகப் பணியாற்றி மறை அறிவினை மறைமாவட்டம் முழுவதும் விரிவுபடுத்தினார்.

1984 - 1989 வரை மாங்குளம் பங்குத் தந்தையாக போர்க்கால சூழ்நிலைகளில் பல சிரமங்களுக்கு மத்தியில் இறைமக்களின் ஆன்மீக சமூகப் பணிகளை மேற்கொண்டார். இக்காலப்பகுதியில் மாங்குளம் பங்கிற்குட்பட்ட வவுனிக்குளம் கத்தோலிக்க மக்களின் ஆன்மீக தேவை கருதியும் தூர இடங்களில் வாழும் மக்களின் சிரமங்களைக் கண்நோக்கியும் தூர நோக்கு சிந்தனையோடு அம்மக்களிற்கு ஆலயங்களை உருவாக்க முன் வந்தார். அதன்படி வவுனிக்குளத்திலுள்ள குடும்பங்களை இணைத்து நீர்ப்பாசனத் திணைக்கள அனுசரணையோடு வேளாங் கண்ணி மாதா ஆலயத்தைத் தோற்றுவித்தார்.

அத்தோடு 1986இல் பாலிநகரிலுள்ள 08 குடும்பங்க ளுடன் புனித அந்தோனியார் ஆலயத்தை உருவாக்கினார். மேலும் தேறாங்கண்டல் பிரதேசத்திலுள்ள 15 குடும்பங்களிற்காக 1986ம் ஆண்டு நல்லாயன் ஆலயத்தையும் தோற்றுவித்தார். இவ்வாறு தூரநோக்கு சிந்தனைகளோடு நிறுவப்பட்ட ஆலயங்கள் கத்தோலிக்க விசுவாசத்தை ஆழப்படுத்தும் ஆலயங்களாக இன்றும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

யுத்த சூழ்நிலைகளின் தாக்கங்களினால் கிறிஸ்தவ குடும்பங்கள் அவதியுறுவதை அவதானித்த அன்றைய ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பணிப்பின் பேரில் 1989 - 1991 வரை கனடா ஒட்டாவா புனித பவுல் பல்கலைக் கழகத்தில் குடும்ப குழு ஆற்றுப்படுத்தலில் முதுமாணிப் பட்டம் பெற்ற அருட்பணி S.J.இராஜநாயகம் அடிகளார் தாய்மண் திரும்பி தமது பணிகளைத் தொடர்ந்தார்.

1992 - 1993 வரை திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். 1993 முதல் 1995 வரை பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய பங்குத்தந்தையாகப் பணியாற்றிய வேளை கிறிஸ்தவ குடும்பங்களை நல்வழிப்படுத்த வேண்டிய தேவை உள்ளதை அவதானித்தார். யாழ் ஆயருடன் கலந்துரையாடி ஆற்றுப்படுத்தல் நிலையமொன்றை உருவாக்க வேண்டும் என்று அகவொளியின் அறிமுகத் திட்டங்களைத் தயார்ப்படுத்தினார்.

அவ்வேளையில் யாழ்ப்பாணத்தின் பாரிய இடம் பெயர்வு யாவற்றையும் தாமதப்படுத்தியது. 1995 இடம் பெயர்வின் போது முகமாலை வேளாங்கண்ணி மாதா

> "கிறிஸ்தவ குடும்பங்களை நல்வழிப்படுத்த வேண்டிய தேவை உள்ளதை அவதானித்து யாழ் ஆயருடன் கலந்துரையாடி ஆற்றுப்படுத்தல் நிலையமொன்றை உருவாக்க வேண்டும் என்று அகவொளியின் அறிமுக திட்டங்களை தயார்ப்படுத்தியவர்"

தொகுப்பு :- ஆ. சான் பெனற்

ஆலயத்திலும் கடல்கடந்து கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்திலும் இறைபணியாற்றினார். அதன்பின்பு கிளிநொச்சி கோணாவில் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் பங்குத்தந்தையாகப் பணியாற்றி மீண்டும் யாழ் மண்திரும்பி தனது கனவை நனவாக்கினார். 1997இல் அகவொளி குடும்ப ஆற்றுப்படுத்தல் நிலையத்தை நிறுவி அன்றைய ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆசீருடன் ஆற்றுப்படுத்தல் பணிகளை ஆரம்பித்தார் என்பதுடன் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட வருகை விரிவுரையாளராகவும் பணிகளைத் தொடர்ந்தார்.

மருத்துவ பீட மாணவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் சிகிச்சை முறைகளைப் பயிற்றுவித்தார். என்பதுடன் சாந்திகம் மற்றும் சுகவாழ்வு உள்ளிட்ட பல நிறுவனங்களின் மேற்பார்வையாளராகவும் ஆலோசனைக் குழுக்களிலும் அங்கம் வகித்தார். யாழ் போதனா மருத்துவமனையிலும் உளவளதேவை உள்ளோரிற்கு வழிகாட்டல் ஆலோசனைகளையும் வழங்கினார். இவ்வாறு உளவள வழிகாட்டுதல்களை அவரது அன்பான புன்னகையோடும் கரிசனையோடும் மேற்கொண்டார்.

1999இல் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் தனது குருத்துவப் பணியின் வெள்ளி விழாவை மிகச்சிறப்பாக எளிமையாகக் கொண்டாடினார். அன்று தொடக்கம் 2016 வரையும் அகவொளி குடும்பவளதுணை நிலைய இயக்குநராகப் பணியாற்றினார். அகவொளி குடும்பவள நிலையத்தால் திருமணம் செய்யவிருக்கும் தம்பதிகளிற்கான திருமண ஆயத்தப் பயிற்சிகளை மாதத்தின் இறுதி வாரங்களில் நடாத்துதல் குடும்பங்களின் தேவை கருதி உளவள ஆற்றுப்படுத்தல்களை மனமுவந்து வழங்குதல் என்று பல்வேறு பணிகளை ஆற்றினார்.

2006ம் ஆண்டு அயர்லாந்து தேசிய பல்கலைக் கழகத்துடன் இணைந்து உளவள ஆற்றுப் படுத்தல் பயிற்சிகளை நெறிப்படுத்தினார். 2006 ஆடி 15 அன்று முதன்முதலாக உளவள ஆற்றுப் படுத்தல் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்பட்டது. அயர்லாந்து தேசிய பல்கலைக்கழக வரலாற்றில் இலங்கையில் சான்றிதழ் வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகப் பதிவாகியது. இன்றுவரை வருடாவருடம் உளவள ஆற்றுப்படுத்தல் சான்றிதழ் அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகத்துடன் இணைந்தே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நீண்டகாலமாக அகவொளி இயக்குநராக பணியாற்றி தனக்கு அடுத்துவரும் அருட்பணியாளர்களைத் தயார்ப்படுத்தி இயக்குநர் நிலையிலிருந்து ஓய்வு பெற்றார். அவர் பணிகளை பொறுப்பேற்கும் அருட்பணியாளர்கள் தொடர்ந்து ஆற்றி வருகின்றனர்.

2017 - 2021 காலப்பகுதியில் திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்திலும் அஞ்சனந்தாழ்வு மரியன்னை ஆலயத்திலும் பங்குத்தந்தையாக ஆன்மீக பணிகளை ஆற்றி தனது 74வது வயதில் நோய் காரணமாக ஓய்வு நிலையை அடைந்து ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஓய்வு இல்லத்தில் வாழ்ந்து வந்த வேளை தனது குருத்துவ பொன் விழாவை எதிர்பார்த்து தமது உறவினர், நண்பர்களுடன் திராட்சையூரில் மிக எளிமையாகக் கொண்டாடக் காத்திருந்தார்.

இறைவனின் திட்டம் அவரது பொன் விழா நாளிற்கு முன்னர் 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 5ம் திகதி நோய் வாய்ப்பட்டு 2023 நவம்பர் 6ம் திகதி இவ்வுலகப் பணிவாழ்வை நிறைவு செய்து விண்ணகம் நோக்கிப் பயணித்தார். குருத்துவ பொன் விழா அண்மிக்கும் காலத்தில் அமரர் அருட்பணி S.J.இராஜநாயகம் அடிகளாரின் பிரிவு யாழ், மன்னார் மறைமாவட்ட குருக்களிற்கும் புனித யாகப்பர் ஆலயப் திருஅவையினருக்கும் மிகுந்த துயரத்தை அளித்தது.

இளவாலை புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தையாலும் இறைமக்களாலும் யாழ் ஆயரிடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளிற்கு இணங்க அடிகளாரின் திருவுடல் இளவாலை மண்ணிற்கு 2023.11.09 அன்று அஞ்சலிக்காக எடுத்து வரப் பட்டமை பங்கு மக்களிற்கு ஆறுதல் அளித்தது.

2023.11.11 அன்று யாழ் மரியன்னை பேராலயத்தில் மறைமாவட்ட திருநிலையினர் சூழ இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மரியன்னை சேமக்காலையில் அடிகளாரின் பொன்னுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அடிகளாரின் இறைபணிகள், நற்பணிகள், சேவை மனப்பான்மைகள், யாவற்றையும் நாம் ஒவ்வொருவரும் மனதில் இருத்தி இறைவனிற்கும் அயலவர்களிற்கும் பணியாற்ற உறுதி கொள்வது அடிகளாரிற்கு செலுத்தும் நன்றிக்கடனாகும். இன்றைய நினைவு நாளில் அடிகளாரின் ஆன்மா இறைவனை மேலும் மகிமைப்படுத்தப் பிரார்த்திப்போம்.

# யாருக்குத்தான் இந்த ஆசை இல்லை

எல்லோரும்தான் நினைக்கிறார்கள் வாழ்வில் ஏதாவது சாதித்து விட வேண்டும் என்று. ஆனால் எல்லோரும் பெரிய சாதனையாளர்களாக மாறிவிடுவதில்லை. சில வேளை அவர்கள் சொல்கிறார்கள், என்னுடைய குடும்பம் ஏழ்மையான குடும்பம். என்னுடைய அப்பா குடிகாரன். என்னுடைய கிராமத்தில் கணனி வசதிகள் இல்லை. நான் மட்டும் பெரிய பாடசாலையில் படித்திருந்தால் எப்படி வந்திருப்பேன் என்று சொல்வதும் உண்டு. உண்மையாகவே என்னுடைய தோல்விக்குக் காரணம் என்னைச் சூழ இருக்கிற இந்தக்



காரணங்கள் தானா?

அது ஒரு பெரிய வயற் காடு. நெற் கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராகக் காற்றிலே அசைந்து ஆடிக் கொண்டிருந்தது. அந்த வயல் வெளியிலே இரண்டு கொக்குகள் வாழ்ந்து கொண்டிருந்தன. ஒன்று தாய்க்கொக்கு மற்றது அதனுடைய குஞ்சு. அறுவடைக் காலம் நெருங்கி விட்டதை அறிந்த தாய்ப் பறவை தான் இரை தேடப் போகிற பொழுது தனது குஞ்சிடம், "இந்த வயல் உரிமையாளனாகிய விவசாயி அறுவடை பற்றி ஏதாவது பேசினால் என்னிடம் சொல்லு" எனச் சொல்லிப் பறந்தது.

மாலையில் வயலுக்கு வந்த தாய்ப் பறவை அந்த விவசாயி ஏதாவது சொன்னாரா எனக் குஞ்சிடம் கேட்டது. அதற்கு அந்தக் குஞ்சு, "நாளை இந்தக் கிராமத்து மக்களைக் கொண்டு அறுவடை செய்யப் போவதாகக் கூறினார்" என்று சொன்னது. அதற்குத் தாய்ப் பறவை, "அப்படியானால் நாளை அறுவடை நடைபெறாது நாங்கள் நிம்மதியாக இருப்போம்" என்றது.

மறுநாளும் இரைதேடப்போன தாய்ப் பறவை விவசாயி சொல்வதைக் கேட்டுச் சொல்லுமாறு குஞ்சிடம் சொல்லி விட்டு பறந்தது. மாலையில் தாய்ப் பறவை வந்தபோது, அந்தக் குஞ்சு, "அம்மா, நாளை இந்தக் கிராமத்து மக்களையும் தன்னுடைய சகோதரர்களையும் கொண்டு வயலை அறுவடை செய்யப் போவதாக விவசாயி கூறினார்" என்றது.

"அப்படியா கூறினார்? அப்படியானால் நாளையும் இந்த வயல் அறுவடை செய்யப்படாது நிம்மதியாகத் தூங்கு" என்றது தாய்ப்பறவை.

மூன்றாவது நாளும் இரை தேடப் போய் மாலையில் திரும்பி வந்த தாய்ப் பறவையிடம் குஞ்சு சொன்னது, "அம்மா, அந்த விவசாயி, நாளை தானே அறுவடை செய்யப் போவதாகக் கூறினார்" என்றது.

இதைக் கேட்ட தாய்ப் பறவை, "குழந்தாய், இந்த இடத்தில் இருந்து புறப்பட ஆயத்தங்களை விரைவாகச் செய்வோம், ஏனெனில் நாளை நிச்சயம் அறுவடை நடக்கும்" என்றது பெரும் நம்பிக் கையோடு. மறுநாள் அறுவடை நடந்து கொண்டிருந்ததை தூரத்து ஒற்றைக் கிளையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தது அந்த குஞ்சு. தாயின் வாக்கு வேதம் என அது உணர்ந்து கொண்டது.

அப்போதுதான் ஒரு உண்மை அதற்குப் புரிந்தது, யார் யாரோ செய்து முடிப்பார்கள் என்று காத்துக்கொண்டிருந்தால், அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நம்பிக் கொண்டு இருந்தால், அவன் வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று பொறுத்துக் கொண்டு இருந்தால் உன் கனவுகள் உன் கையை விட்டுத் தூரத்துரமாய் நழுவிக்கொண்டே போகும்.

**பாதைகளே இல்லை என புலம்பிக் கொண்டு இருக்காதே. உனக்கான பாதைகளை நீயே உருவாக்கு. நீ நடக்க நடக்க பாதைகள் பிறக்கும். நீ பறக்க பறக்க வானங்கள் விரியும்.**

உன் கனவு தேசப் பயணத்திற்கான முதல் அடியை உன் கால்களில் இருந்து தொடங்கு.

"உலகத்தில் எல்லோருக்கும் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் அந்தப் பக்கத்தை எல்லோரையும் படிக்க வைப்பது அவனவன் கையில் இருக்கிறது" என்கிற அப்துல் கலாமின் வரிகள் எவ்வளவு உண்மையானவை. பாதைகளே இல்லை எனப் புலம்பிக் கொண்டு இருக்காதே. உனக்கான பாதைகளை நீயே உருவாக்கு. நீ நடக்க நடக்க பாதைகள் பிறக்கும். நீ பறக்கப் பறக்க வானங்கள் விரியும்.

அருட்பணி எஸ்.அஜந்தன்

## அன்பும் நீதியும்

அன்பும், நீதியும் சமூகத்தின் உயிர் மூச்சு. இரண்டும் சம அளவில் இருந்தால் மட்டுமே சமூகம் தடம் பிறழாமல் சீராகச் செல்லும். ஆனால் இரண்டையும் இணக்கமாகக் கொண்டு செல்வது மிகப்பெரிய சவால். சிசிலி நாட்டின் அரசர் ஒரு கட்டளை பிறப்பித்தார். அந்தக் கட்டளையை மீறுவோர் இரு கண்களையும் இழக்க வேண்டும். துரதிஸ்டவசமாக அந்த நாட்டின் இளவரசன் கட்டளையை மீறிவிட்டான். தந்தையான அரசனுக்கு மிகப்பெரிய சோதனை. அன்பா? நீதியா? இறுதியில் ஒரு முடிவுக்கு வந்த அரசன் தன் ஒரு கண்ணையும் மகனின் ஒரு கண்ணையும் பிடுங்கி, தண்டனையை 50:50 என்று நிறைவேற்றினான். அன்பும், நீதியும் ஒரே நேரத்தில் வெற்றி பெற்றன. அன்பையும், நீதியையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்பவர்களே இன்றைய சமூகத்திற்கு அவசியமானவர்கள்.

*நன்றி: இந்த நாள் இனிய நாள்*

**தமிழர் மத்தியில் கிறிஸ்தவத்தின் பணியைச் சர்வமதச் சூழலில் சிறப்பிக்க விளைகின்றேன்.**

அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்

**ஒரே ஒளி முக்கோண கண்ணாடியினூடாக (Prism) பல்வேறு நிறங்களாகத் தோன்றுவதுபோல் ஒரே இறைவனிடமிருந்து பல பண்பாடு மதங்கள் மனித வாழ்விற்காக இயங்குகின்றன. இவைகளெல்லாம் அதே இறைவனில் முற்றுப்பெறும்**

# எல்லா மதங்களின் ஊற்றும், நோக்கமும், முடிவும் ஒன்றே

**அத்தியாயம் 1**

**1.1: எல்லா மதங்களின் ஊற்றும் முடிவும் ஒன்றே!**

எல்லா மதங்களும், இறைவனை ஊற்றாகக் கொண்டு, மனிதனினால் உருவாக்கப்பட்டன. எப்படி என்ன நோக்கத்திற்காக மனிதன் மதங்களைத் தோற்றுவித்தான்? மனிதர் வியப்புடன் சகல படைப்புகளின் காரண கர்த்தாவாகியவரைத் தேடினர். தேடித் தவிக்கும் மனிதருக்கு, இறைவன் தாமே முன்வந்து தம்மை வெவ்வேறு மனிதருக்கு வெவ்வேறு அறிகுறிகளினால் வெளிப்படுத்தினார். மனிதர் வியப்புடன் சகல படைப்புகளின் காரண கர்த்தாவாகியவரைத் தேடினர். அதிர்ச்சியான அறிகுறிகளையும் ஞானிகளையும், பல்வேறு இடங்களிலும் பல்வேறு இனங்களுக்கும் பல்வேறு விதத்திலும் வெளிப்படுத்தினார். இன்றும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்.

இவ்வறிகுறிகளையும் ஞானிகளையும் இறைவனின் வெளிப்பாடாக ஏற்ற மனிதர், அந்த அறிகுறிகளை ஆதாரமாகக் கொண்டே, தமது கலை கலாசாரப் பின்னணியில், வியப்பை வெளிப் படுத்தும் வழிபாடுகள், சடங்குகள் ஆராதனைகளையும் ஆரம்பித்தனர். அவைகளிலிருந்து பிறந்த படிப்பினைகளைப் போதனைகளாக்கி மதங்களும் அவைகளின் அமைப்புகளும் பிறந்தன. இவைகள் மக்களின் கலை கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்து பல நூற்றாண்டுகளாக மக்களால் மதங்களாக வளர்க்கப்பட்டு வருகின்றன.

**1.2 : மனிதருக்காகவே, மனிதரினால் மதங்களும் மத-அமைப்புகளும் உருவாக்கப்பட்டன.**

எல்லா மதங்களும் மனிதரினாலே, மனிதரின் நலனுக்காக, அவர்களுடைய இருப்பின் நோக்கங்களை அடைவதற்காக, அவர்களின் நலனை, ஏக்கங்களைத் தாகங்களைத் தீர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டன. மனித அமைப்புகள். மனிதர் எல்லோரும் இறைவனின் பல்வேறு வெளிப்படுத்தல்களை, போதனைகள் நோக்கங்களை மதித்து மதங்களை அமைப்புகளாக ஆரம்பித்து வளர்த்திருக்கின்றனர். மனிதருடைய பாவங்கள் பெலவீனங்கள் இந்த அமைப்புகளில் ஏராளமாகப் படர்ந்து இருக் கின்றன. இதன் காரணமாக மதங்களை எப்போதும் தமது ஆரம்ப நோக்கங்களுக்குப் பிரமாணிக்கமாகப் புதுப்பிப்பதே சிறந்தது. .

உதாரணமாக: யூதேய மக்களுக்கு இயேசுவாகத் தோன்றிய இறைமகன் வெளிப்படுத்திய போதனை சாதனைகளை அடித்தளமாகக் கொண்டே கிறிஸ்தவம் ஆரம்பிக்கப்பட்டது. நீண்ட காலமாக ஐரோப்பியர் மத்தியிலே பல பெலவீனங்களுடன் வளர்ந்த மதம், எங்கள் காலத்திலே, கிறிஸ்தவத் தலைவர்கள் ஒன்றாகக் கூடி, ஊற்றிற்குப் பிரமாணிக்கமாகப் புதுப்பித்தலுக்கான முயற்சியை எடுக்கின்றனர்.

**1.3 : எல்லா மதங்களின் ஊற்றான ஒரே இறைவன், முரணான வெளிப்படுத்தல்களைக் கொடுத்திருக்க முடியாது**

ஒரே ஊற்றிலிருந்து பிறந்த மனிதர்களுக்கு, அதே ஊற்றிலிருந்து வெளிப்படையானவைகள் அடிப்படையிலும் சாராம்சத்திலும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். உதாரணமாக, ஏனெனில் ஒரே உலகத்தில் ஒரே சூழலில் வாழ்ந்து கொண்டு, ஒரே விதமான பிரச்சினைகள் சவால்களுக்கு முகங்கொடுக்கும் தமிழ் மனிதர்கள், இறைவனை வழிபடும் பொழுது கொண்டிருக்கும் நோக்கங்கள் கிட்டத்தட்ட ஒன்றாகவே இருக்கின்றன.

இறைவன் மனிதருக்கு, அடையாளங்களூடாக வெளிப்படுத்திய உண்மைகள் எல்லாம், மனிதர் படைத்தவரின் சிருட்டிப்பின் இறுதி நோக்கத்திற்கு இணங்க வாழவேண்டும், நடக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

ஆகையினால் மதங்களின் போதனைகளை உருவாக்கி வெளிப்படுத்துவதிலும், இறைவனுடன் உறவு கொள்வதற்காக ஏற்படுத்திய செபங்கள், சடங்குகள் வித்தியாசமாக இருக்கலாம். ஆனால் ஒரே இடத்தில் ஒரே சூழலில் வாழ்ந்து, சவால்களுக்கு முகங் கொடுக்கும் தமிழர்களுக்காகவே எல்லா மதங்களும் தலைவர்களும் பணியாற்றுகின்றனர் என்ற காரணத்தால் பொது மனித சமூக தேவைகள் பிரச்சினைகள் பற்றி முரணான போதனை இல்லை.

(தொடரும்....)

## இனிய திறன்

வாழும் வரை போராடி, நேர் வழியினில் பயணிப்போம். சோதனையை வென்று, சாதனை படைக்கும் சிற்பிகளாக மாற, முயற்சி எடுப்போம். எல்லாரும் எல்லாம் பெற்றிட, இல்லாமை இல்லா நிலை வேண்டி, கற்றலில் வெற்றி காண்போம்.

**அன்பு நெஞ்சங்களே!**

இன்று, ஆன்மீக வழிகாட்டல் பற்றிக் கற்றுக் கொள்வோம்.

எங்களுடைய உண்மையான அடையாளப்படுத்தல் கடவுளின் குழந்தையாக இருப்பதாகும். இந்த அடையாளமே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது. நாம் இதனை ஏற்று, ஒழுங்குபடுத்தி வாழும்பொழுது பெரும் மகிழ்வு எம்மிடையே காணப்படும். எமது அடிப்படை அடையாளப்படுத்தலை வலுப்படுத்தும் சந்தர்ப்பமாக அது வரும்பொழுது எமது வாழ்வு இனிதே அமையும்.

ஆன்மீக வழிகாட்டல் எமக்குத் தேவைப்படுகின்றது. எம்மை உண்மையாக அடையாளப்படுத்துவதில் நங்கூரமிடும் ஆட்களே தேவைப்படுகின்றார்கள். கடவுள் உறையும் அந்த ஆழமான இடத்தில் உலகப் போக்கு முற்றாக முறியடிக்கப்பட்டிருக்கும்.

கடவுளின் குழந்தையாக ஆழ்ந்த இடத்தில் நாங்கள் வேரூன்றியது நீண்ட காலமாக எங்களுக்குத் தெரியாதிருந்ததால், எங்களைத் தொடமுடிந்த ஒரு சிலர் மூலமாக சடுதியாகப் பெருமளவு சக்தியைப் பெறலாம். அவர்கள் எங்களது அடையாளத்தின் ஒருபகுதியானார்கள். இனிஅவர்கள் இல்லாமல் நாங்கள் ஒருபோதும் இருக்கவியலாது. அவர்களால் அந்தத் தெய்வீக வலுவூட்டலை மேற்கொள்ள இயலவில்லை. மேலும், நாங்கள் கைவிடப்பட்டதை உணர்ந்தோம். ஆனால், அந்தக் கைவிடப்பட்ட அனுபவமே, கடவுளின் குழந்தை என்ற உண்மையான அடையாளத்திற்கு மீண்டும் இட்டுச் சென்றது. எங்களிலுள்ள அந்த ஆழமான இடத்தில் கடவுள் மட்டுமே வாழ முடியும். அது பாதுகாப்பு உணர்வைத் தருகின்றது. ஆனால், எங்களது புனிதப் புள்ளியிலிருந்து எங்களைத் தப்பி ஓடச் செய்ய மற்றவர்களை அனுமதிப்பது, வேதனைக்கு உள்ளாக்குவது ஆபத்தானது. எங்களது ஆழமான, மறைந்த சுயத்தையும் உலகினால் குற்றம் சாட்டப்பட்ட எங்களது பகிரங்க சுயத்தையும் மீள் இணைப்பதற்குக் கூடுதலான காலமும் கட்டுப்பாடும் தேவைப் படுகின்றது. படிப்படியாக நாங்கள் தொடர்புபடுத்தப் படுவதை உணர ஆரம்பிப்பதோடு, கடவுளின் குழந்தையாக நாங்கள் உண்மையில் உள்ளவாறே முழுமையாவது சாத்தியமாகும். எங்களது உண்மையான விடுதலை வெளிப்படும்.

**மகிழ்வுடன் வாழ வாழ்த்துக்கள்!**

**அன்புடன் வீபி**

# அன்பின் மகிழ்வு



21

குடும்பத்தில் உழைப்பு

ஒருமுறை மூன்று பிள்ளைகள் தந்தையுடன் உணவருந்துவதற்காக உணவருந்தும் மேசையில் அமர்ந்தார்கள். கட்டட வேலையில் அப்பா ஈடுபட்டதன் காரணத்தால் அவருடைய கரங்கள் மிகவும் கடினமாக மரத்து இருந்தது. "அப்பா ஏன் உங்கள் கரங்கள் இவ்வாறு கடினமாக உள்ளது" என்று இளைய மகன் தன் தந்தையைக் கேட்டான் அதற்குத் தந்தை நான் உன்னை நன்றாகப் பாதுகாப்பாக வைத்திருக்க, உனக்கு அன்றாடம் மேசையில் உணவை கொடுக்க, நீ நன்றாகக் கல்வியறிவில் வளர நான் கடினமாக நாளாந்தம் உழைப்பதே இந்தக் கரங்கள் இவ்வாறு கடினமாக இருப்பதற்குக் காரணம் என்றார். இந்தக் கரங்கள் தான் நான் எவ்வளவு உன்னை அன்பு செய்கிறேன் என்பதையும் உனக்கு வெளிப்படுத்துகின்றன என்றார். ஒரு தந்தையின் வாழ்வு என்பது ஓர் தியாகப் பலி. உழைப்பு என்பது ஒரு தந்தை தன் குடும்பத்தின் மேல் கொண்ட உள்ள அன்பின் பிரதிபலிப்பாகும்.

(சங்கீதம் 128:2) ஓர் தந்தையின் மேன்மையை உணவு மேசையில் படம் பிடித்துக் காட்டி கடவுளுக்கு அஞ்சி வாழும் தந்தையொருவரின் ஆசீர்களில் ஒன்று "உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்". எனத் திருப்பாடல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன. எனவே உழைப்பு என்பது ஓர் கடமை மட்டுமல்ல அது ஒருவர் வாழ்வில் மிகுந்த ஆன்ம திருப்தியை மனம் ஒன்றித்த உணர்வை இன்னும் சிறப்பாகக் குடும்பத்துக்கான ஒரு சிறந்த பாதுகாப்பை வழங்கும் செயற்பாடாயிருந்து மனநிறைவை வழங்குகின்றது என்பதே யதார்த்தம். உழைப்பு என்பது ஒரு மனிதனின் மாண்பை வளர்ச்சியுறச் செய்கிறது. தனி மனிதன் ஒருவனது குடும்பத்தின் வளர்ச்சியில் மிகப் பெரும் பங்காற்றுகின்றது.

எனவே தான் திரு அவையானது மனித உழைப்பு மட்டில் ஓர் அழகான இறையியலை உருவாக்கியுள்ளது. கடவுள் மனிதனை உருவாக்கிய போதே அவனை ஏதேன் தோட்டத்திற்கு அழைத்து வந்து அதனைப் பண்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான (தொடக்க நூல் 2:15) கட்டளை ஒன்றை அவனுக்குக் கொடுத்தார். எனவே மனித உழைப்பு என்பது கடவுளின் படைப்புத் தொழிலில் பங்கேற்கும் ஓர் உன்னதமான நிலையாகும். கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனின் ஓர் உன்னத நிலையின் வெளிப்பாடே மனித உழைப்பாகும். ஓர் தனி மனிதன் தன் ஆற்றல்கள் திறமைகளை வளர்த்து இந்த உலகிற்குப் பணி செய்வது என்பது மனித உழைப்பின் ஊடாகவே. இந்த வகையில் ஒரு மனிதனின் உழைப்பானது ஓர் குடும்பத்திற்கான உறுதித்தன்மையையும் குடும்பத்தின் பராமரிப்பிற்கான ஒரு முக்கிய கருவி என்பதையும் உறுதிப்படுத்துகின்றது. இது சமூக வாழ்வுக்கும் அதன் வளர்ச்சிக்கும் அவசியமான ஒன்றாகும்.

"ஆண்டவர் சீயோனிலிருந்து உனக்கு ஆசீர் வழங்குவாராக" (திருப்பாடல் 128:5) மனித உழைப்பானது ஒரு சமூகத்திற்கான மிகப்பெரும் ஆசீராக அமைகின்றது. (நீதிமொழிகள் 31:17-18) இவ்வாறு ஒரு தாயையும் குறிப்பிடுகின்றது. "சுறுசுறுப்புடன் அவள் வேலை செய்வாள். அயர்வின்றி நாள் முழுவதும் ஊக்கம் குன்றாது உழைப்பாள். தன் உழைப்பு நற்பலன் தரும் என்பது அவளுக்குத் தெரியும். அவள் தன் வீட்டில் ஏற்றி வைத்த விளக்கு ஒரு போதும் அணையாது".

எனவே தான் திருத்தூதர் பவுல் தன் வாழ்வில் மனித உழைப்புப் பற்றிக் குறிப்பிடுகையில் தன் வாழ்வாதாரம் பிறரில் தங்கி இருக்கா வண்ணம் தன் வாழ்வுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றும் பொருட்டுக் கூடாரம் செய்யும் தொழிலைச் செய்து வந்தார். (திருத்தூதர் பணி 18:3) என் கைகளால் பாடுபட்டு உழைக்கின்றோம்". (1 கொரிந்தியர் 4:12) என்கின்றார்.

எனவே ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர் சிறப்பாக குடும்பத்தலைவர் தனது கடின உழைப்பின் மூலம் தன் குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டும். வேலை இல்லா பிரச்சனை என்பது மிகப்பெரும் அவல நிலையாகும்.

திராட்சைத் தோட்ட வேலையாட்கள் பற்றிய உவமையில் (மத்தேயு 20:1-6) இல் வேலையில்லாமல் காலை தொடக்கம் மாலை வரை வீதிகளில் காத்து நிற்பது என்பது மனதை உருக்கும் ஓர் காட்சியாகும். யார் எமக்கு வேலை தருவார்கள் என்ற ஒரு தவிப்புடன் காத்திருப்பது என்பது அவர்கள் தங்கள் குடும்பத்தின் பாரத்தை மனதில் சுமந்து அன்று உழைத்த ஊதியத்துடன் வீடு செல்ல மாட்டோமா என்ற மன ஏக்கத்துடன் கூடிய அவர்களது உழைப்பின் மேல் கொண்டுள்ள ஆவலை ஆர்வத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறாகப் பல குடும்பத் தலைவர்கள் தம் குடும்பங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் பொருட்டு பல வகை ஏக்கங்களுடன் வேலை தேடிக் காத்திருப்பதென்பது எமது சமூகத்திலும் உள்ள ஓர் மிகப்பெரும் பிரச்சினையாயுள்ளது. எனவே மனித உழைப்பு மட்டில் ஓர் குடும்பம் சிறப்பாக குடும்பத் தலைவர்கள் பொறுப்புணர்ந்து முயற்சி செய்து தனது குடும்பத்திற்காக உழைப்பமு என்பது கட்டாயத் தேவையாயுள்ளது.

1. குடும்ப வாழ்வுக்காக கணவனும் மனைவியும் உழைக்க

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

வேண்டும். கணவன் வெளியே சென்று வேலை செய்து வரும் வேளையில் மனைவி குடும்பக் கடமைகளை நல்ல முறையில் செய்து குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும். இருவரும் வெளியே சென்று பணிபுரிபவராயின் குடும்பத்தின் கடமைகளையும் இருவரும் சமமாகப் பகிர்ந்து நிறைவேற்றுதல் வேண்டும். இருவரும் தங்களுக்கு ஏற்ற வகையில் கடினமாக உழைத்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். இருவரும் ஒருவர் மற்றவரின் உழைப்பின் பங்களிப்பை மதிக்கப் பழக வேண்டும் இருவரும் ஒன்றித்துத் தங்கள் கடின உழைப்பை வழங்கும் போது மட்டுமே குடும்பம் வளர முடியும்.

2. தம்பதிகள் இருவரும் தமக்கே உரித்தான பாணியில் உழைத்தாலும் இருவரும் குடும்பத்தில் வேலை செய்யும் நேரத்தையும் குடும்பத்தோடு சிறப்பாக அவர்கள் தங்கள் பிள்ளைகளோடும் கணவன் மனைவி இருவரும் தமக்குள்ளும் செலவிடும் நேரத்தையும் சரியாக பங்கிட்டுப் பயன்படுத்துவதில் விழிப்பாயிருக்க வேண்டும். குடும்பத்தில் அவர்கள் பிள்ளைகளோடு செலவழிக்க வேண்டிய நேரமானது எக் காரணத்துக்காகவும் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும் என்பது முக்கியமானதாகும்.

3 பெற்றோர் தாங்கள் கடினமாக உழைப்பது மட்டுமல்ல தங்கள் பிள்ளைகளும் கடினமாகத் தங்களுக்குரியவற்றில் பொறுப்புடன் உழைக்க பழக்க வேண்டும் குடும்பத்திற்கு வேண்டிய சிறிய சிறிய வேலைகளை சிறு வயதிலிருந்து பொறுப்புணர்ந்து செய்யப் பழக்க வேண்டும் இவ்வாறு பிள்ளைகளும் குடும்பத்தின் அன்றாட சுமைகளைத் தங்களுக்கு இயலுமான வகையில் சுமக்க பழக்க வேண்டும் இது அவர்களையும் இத்தகைய கடின உழைப்பு வாழ்வின் எதிர்காலத் தேவைக்குப் பயிற்சி பெற இட்டுச் செல்வதாயமையும்.

4. தம்பதிகள் இருவரும் தமக்கே உரித்தான பாணியில் உழைத்தாலும் இருவரும் குடும்பத்தில் வேலை செய்யும் நேரத்தையும் குடும்பத்தோடு சிறப்பாக அவர்கள் தங்கள் பிள்ளைகளோடு செலவிடும் நேரத்தையும் சரியாகப் பயன்படுத்தப் பழக வேண்டும். குடும்பத்தில் அவர்கள் பிள்ளைகளோடு செலவழிக்க வேண்டிய நேரம் ஆனது எக் காரணத்துக்காகவும் விட்டுக் கொடுக்கப்பட முடியாத ஒன்றாகும்.

5 பெற்றோர் தாங்கள் கடினமாக உழைப்பது மட்டுமல்ல தங்கள் பிள்ளைகளும் கடினமாகப் பொறுப்புடன் உழைக்க பழக்க வேண்டும் குடும்பத்தில் சிறிய சிறிய வேலைகளைச் செய்ய சிறு வயதிலிருந்து பழக்க வேண்டும் இவ்வாறு பிள்ளைகளும் குடும்ப சுமைகளைத் தங்களுக்கு ஏற்ற வகையில் சுமக்க பழக்க வேண்டும் இது அவர்களையும் கடின உழைப்பு வாழ்வுக்கு இட்டுச் செல்லும்.

## அகில உலக மாணவர் தினம்


கற்றுக்கொள்ள வேண்டியவைகளை மாணவப் பருவத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக நல்ல பண்புகளான பிறருக்கு உதவுதல், மரியாதையளித்தல் போன்றவைகளை மாணவராக இருக்கும் போது கற்றுக் கொண்டவர்களே மிகச் சிறந்த மனிதர்களாக இருக்கின்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒருங்கிணைந்த படைகளின் தளபதி இராபர்ட் லீ. இவர் ஒருமுறை தன் அலுவலர்களோடும், படை வீரர்களோடும் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். ஒரு ரயில் நிறுத்தத்தில் வயதான ஏழை மூதாட்டி ஒருவர் ரயிலில் தள்ளாடித் தள்ளாடி ஏறினார். யாரும் அந்த மூதாட்டியைக் கண்டுகொள்ளவில்லை.

மூதாட்டி ஏறுவதை அவதானித்த இராபர்ட் லீ அவர்கள் உடனே எழுந்து நின்று தனது இருக்கையை மூதாட்டிக்குக் கொடுத்து அவரை அன்புடன் அமரச் செய்தார். பின்னர் இராபர்ட் லீ அவர்கள் நின்றபடி பயணம் செய்தார். இதை அவதானித்த அனைவரும் எழுந்து இராபர்ட் லீ அவர்களை அமருமாறு பணித்தனர். இராபர்ட் லீ அவர்கள் அவ்விருக்கைகளை ஏற்க மறுத்து, "அந்த மூதாட்டிக்கு இடமளிக்காத போது எனக்கு இடமளிப்பதை ஏற்க இயலாது. இவை நம் பண்பாடாக மாறியிருக்க வேண்டும்" என்றார். உயர்ந்த பண்புகளை, மனித நேயத்தை, சமத்துவத்தை, நீதி உணர்வை வளர்த்துக் கொள்ள ஏற்றகாலம் மாணவப் பருவமே. "ஈரெட்டில் கல்லாத கல்வி வீண்"

## அகவொளி குடும்ப நலமையம்
## திருமண சேவை





### மணமகள் தேவை

வயது : - 31
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- BCS Computer Studies (London)
தொழில் :- Software Enfineering
பிரதேச செயலகம் :- கோப்பாய்

வயது - 31
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- G.C.E. A/L Maths
தொழில் :- Technical Officer
பிரதேச செயலகம் :- சண்டிலிப்பாய்

வயது - 28
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை :- HNDE
தொழில் :- English Teacher
பிரதேச செயலகம் :-யாழ்ப்பாணம்

வயது - 34
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- AC மெக்கானிக்
பிரதேச செயலகம் :- முல்லைத்தீவு

வயது - 34
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BA
தொழில் :- சமூர்த்தி வங்கி உதவி முகாமையாளர்
பிரதேச செயலகம்:- நல்லூர்

வயது - 34
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Computer Science Jaffna University
தொழில் :- Computer Engineer
பிரதேச செயலகம் :- புதுக்குடியிருப்பு

### மணமகன் தேவை

வயது - 46
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - தரம் 11
தொழில் :- Civil Designer
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 31
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - G.C.E. A/L
பிரதேச செயலகம் :- மாதகல்

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்**
**அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கங்கள்**
**077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.**

## வாசக நேயர்களே!


25.12.2024 கிறிஸ்மஸ் சிறப்பு இதழுக்கான ஆக்கங்கள் வாசக நேயர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். கவிதைகளாகவோ, கட்டுரைகளாகவோ மற்றும் சிறு குறிப்புக்களாகவோ அனுப்பி வைக்க முடியும். உங்கள் ஆக்கங்கள் அனைத்தும் 15.12.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

ஆசிரியர் - பாதுகாவலன்
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: 'அனுர அலை'யைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: 'ஓயாத அலை' 1, 2 பற்றி அறிந்திருப்பீர்கள். இரவு பகல் பாராது நடந்த சமர். அந்த அலை வேறு, 'அனுர அலை' வேறு! எனினும், அனுர அலையும் குறிப்பிட்ட சில நாட்களுக்குள்ளேயே ஓயாத அலையாக அடித்துக் கொண்டிருக்கிறது. 'அனுர அலை'யால் தான் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றியை என்பிபி பெற்றுக்கொண்டது. சமத்துவம், நீதி, ஊழலற்ற ஆட்சி போன்றவற்றைக் கையில் எடுத்திருப்பதால் 'அனுர அலை' மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. காரணம், கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் முதலை விழுங்குவது போல நாட்டின் வளங்களை முழுமையாகவே விழுங்கியதால் நாடு பெரும் நெருக்கீட்டைச் சந்தித்தது. இதனை மக்கள் உணர்ந்துகொண்டதால்தான் அனுர அலையில் காவுகொள்ளப் பட்டார்கள். எனினும், இந்த அலை அதே வீச்சில், அதே திசையில் அதே வேகத்தில் அடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் எல்லாருடைய விருப்பமும். இருப்பினும் தேசிய (இனப்) பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது 'அனுர அலை'க்குச் சவாலாக இருக்கப்போவது உண்மை.




*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: அனுரவின் ஆட்சியில் தமிழர்களுக்கு நீதி கிடைக்குமா?**

ப: தோழர் இப்பதான் முழுமையான ஆட்சி அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். கொஞ்சம் 'ரைம்' காடுக்கத்தானே வேண்டும் அன்ரன்.

**அருட்பணி செ. அன்புராசா,அமதி**

# என் கேள்விக்கென்ன பதில்!

*(விஜி, மன்னார்)*

**கேள்வி: கடந்த ஆட்சிக் காலத்தில் சில பேர் என்ன ஆட்டம் ஆடினார்கள் தெரியுமா!? அவர்களைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: நீங்கள் நினைப்பது போலதான் நானும் நினைக்கிறேன் என நினைக்கிறேன் விஜி! இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் விஜி!? ஆட்டம் போடுகிறவர்களுக்குப் பட்டினத்தார் சொல்வதையும் மனத்தில் பதித்துவைப்பது நல்லது: "ஆடுகிற ஆட்டமும் ஓடுகிற ஓட்டமும் ஒருநாள் ஓயும்போது கூடுகிற கூட்டம்தான் சொல்லும் நீ யாரென்பதை" என்கிறார்.

*(நாதன், கிளிநொச்சி)*

**கேள்வி: 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 11 பேராசிரியர்கள், 19 அதிபர் ஆசிரியர்கள் தெரிவாகி இருப்பதாகத் தெரிகின்றது. இத்தெரிவைப்பற்றி?**

ப: அறுவை தாங்கேலாமல் அழுத கொஞ்சப் பல்கலைக்கழக, பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சரியான சந்தோசமாக இருக்கும் நாதன்!

*(மயூரன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: யாழ்ப்பாணம், வன்னித் தேர்தல் மாவட்டங்களின் 12 ஆசனங்களில் தலா ஒருவரே முறையே தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் அதேவேளை என்பிக்கு முதன்முறையாக நான்கு ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. மக்கள் சுயநிர்ணய உரிமை, தாயகம், தன்னாட்சி போன்ற கோட்பாடுகளை நிராகரித்திருக்கின்றார்கள் என்ற முடிவுக்கு வரலாமா?**

ப: மயூரன், சுயநிர்ணய உரிமை, தாயகம், தன்னாட்சி போன்றவற்றை நிராகரித்திருக்கிறார்கள் என்று உங்களுக்கு யார் சொன்னது!? அரசியல்வாதிகளின் ஒற்றுமையின்மையைத்தான் வடபகுதி மக்கள் நிராகரித்திருக்கிறார்கள் என்று தான் கொள்ளவேண்டும். இனிவரும் காலங்களில் ஒன்றிணையவில்லை என்றால், இருந்து பாருங்கள், மக்களின் வெறுப்பை மேலும் சம்பாதிப்பார்கள் என்பது சர்வ நிச்சயம்.

*(றமேஸ், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: அரசியல் கேள்விகளுக்கு அருமையாகப் பதில் சொல்லுகின்றீர்கள்! நாட்டு நடப்புக்களையும் உலக நடப்புக்களையும் மிக நுட்பமாக ஊடுருவிப் பார்க்கின்றீர்கள்? உங்களுக்கு எப்படி இந்தத் திறமை வாய்த்தது?**

ப: றமேஸ், சின்ன வயதில கிடுகுவேலி ஓட்டைகளால் ஊடுருவிப் பார்த்துப் பார்த்துப் பழகின அந்த அனுபவம், இப்போது வீட்டையும், நாட்டையும் ஊடுருவிப் பார்க்க உதவியாக இருக்கிறது! ஹா..ஹா…ஹா..(சிரிக்க வேண்டும்)!

# அருளாளர்களின் வாழ்வு நமது கிறிஸ்தவ நம்பிக்கைக்கு உரமளிக்கட்டும்

கடந்த 16 ஆம் திகதி அல்பேனியாவின் ஸ்குத்தாரியில் அருளாளர்களாக உயர்த்தப்பட்ட Frati Minori சபையைச் சார்ந்த அருள்பணியாளர் Luigi Palić மற்றும் 20ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்திற்காகத் துன்புற்று மறைசாட்சியாக இறந்த மறைமாவட்ட அருட்பணியாளர் Gjon Gazulli, நவம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை அருளாளராக உயர்த்தப்பட்ட கிறிஸ்து அரசர் சபையை நிறுவிய Max Josef Metzger ஆகியோரின் வாழ்வு நமது நம்பிக்கைக்கு உரமளிக்கட்டும் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த 17 ஆம் திகதி வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய மூவேளைச் செப உரையைத் தொடர்ந்து செப விண்ணப்பங்களின் போது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையின் மூன்று புதிய அருளாளர்களுக்காகக் கரவொலி எழுப்பி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன் கிறிஸ்தவ நம்பிக்கைக்காகத் துன்புறும் இக்காலக் கிறிஸ்தவர்களுக்குப் புதிய அருளாளர்களின் தியாக வாழ்வு ஊக்கத்தையும் உறுதியையும் அளிக்கட்டும் என்றும் கூறினார்.

"ஏழைகளின் வாயினின்று எழும் விண்ணப்பம் கடவுளின் செவிகளை எட்டும்" என்ற கருப்பொருளில் கடந்த 17 ஆம் திகதி திருஅவையில் சிறப்பிக்கப்படும் அகில உலக வறியோர் நாளைக் குறித்துத் தனது கருத்துக்களை எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், மறைமாவட்டங்கள் பங்குத்தளங்கள், என இந்நாளைச் சிறப்பிக்கும் அனைவருக்கும் தனது நன்றியினையும் தெரிவித்தார். மேலும் சாலை விபத்தில் இறந்தவர்களுக்காகவும் அவர்களது குடும்பங்களுக்காகவும் செபிக்க வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், சாலை விபத்துக்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக நம்மை நாம் அர்ப்பணிப்போம் என்றும் கூறினார்.

ஏழைகளுக்கு ஏதாவது கொடுத்து உதவ முயற்சிக்கின்றேனா? அப்படி உதவும்போது அவர்களின் கைகளைத் தொட்டு உதவுகின்றேனா? அவர்களது கண்களைப் பார்த்து உதவுகின்றேனா என்று ஒவ்வொருவரும் தனக்குள் கேள்வி கேட்டுக்கொள்ள வலியுறுத் திய திருத்தந்தை அவர்கள் ஏழைகள் காத்திருக்க முடியாது என்பதை ஒருபோதும் மறந்து விடவேண்டாம் என்றும் எடுத்துரைத்தார்.


## நீங்கா நினைவில் 6ம் ஆண்டு

பிறப்பு 29 . 12 . 1939



இறப்பு 06 . 11 . 2018

**அருட்தந்தை தோமஸ் மகேந்திரன் இராஜநாயகம்**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே,
என்னிடம் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11: - 25)

ஆண்டுகள் பல ஆனாலும்
உங்கள் நினைவுகள் இன்றும்
எம் நெஞ்சில் நிழலாடுகின்றன

தகவல்
அருட்தந்தை S.A. ஜோர்ஜ்

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 10 . 1979



உதிர்வு 14 . 11 . 2012

குருவாக - 18.05.2011

அமரர். **அருட்பணி. கீதபொன்கலன் லக்ஸ்மன்**

'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் நம்பிக்கை
கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'(யோவான் 11:25)

நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர் AD - 58

## விண்ணக வாழ்வின் 5ம் ஆண்டின் நீங்கா நினைவுகளுடன்

மலர்வு 17 . 07 . 2010



உதிர்வு 19 . 11 . 2019

அமரர். **சி . பென்சித் றஜாந்தி**

(மாணவி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**ஐந்தாண்டுகள் ஓடினாலும் ஆறாது எம் துயரம், ஆதவனாம் யேசுவினால் ஒளிரும்
நிலவானாய் என்றும் நீ. உன் ஆத்மா இறைவனில் மகிழ்ந்திருக்க
புனிதர்களோடு புனிதையாய் நீங்கா
பேரின்பத்தில் - என்றும் திழைத்திருக்க
இறைவனிடம் வேண்டுகின்றோம்**

100, பழைய பூங்கா வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தங்கை, உறவுகள்.

AD - 56

# யாழ். குருக்களுக்கான வருடாந்தத் தியானம்



யாழ். மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம் இரண்டு பிரிவுகளாக முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் முதலாம் குழுவினருக்கான தியானம் கடந்த 04ஆம் திகதி தொடக்கம் 08ஆம் திகதி வரை பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை தியான இல்லத்தில் நடைபெற்றது. இயேசு சபையை சேர்ந்த அருட்தந்தை லசந்த டி அபிறியூ அவர்கள் நெறிப்படுத்திய இத்தியானத்தில் தியான உரைகள், சிறப்பு நற்கருணை ஆராதனைகள், திருப்பலிகள் என்பன இடம்பெற்றதுடன் 60 வரையான குருக்கள் பங்குபற்றினார்கள்.

# கௌதாரிமுனை வாடி திறப்பு விழா



பூநகரி கௌதாரிமுனை கடற்கரையில் வன்னி கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுவந்த வாடிக்கான கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அக்கட்டடத் திறப்பு விழா 15ஆம் திகதி நடைபெற்றது. கௌதாரிமுனை புனித அந்தோனியார் ஆலய கடற்தொழிலாளர்களின் தொழில் உபகரணங்களைப் பத்திரப்படுத்தி அவர்களின் தொழிலை இலகுபடுத்தும் நோக்கில் கௌதாரிமுனையில் இயங்கிவரும் வாழ்வாதார கடன்திட்ட குழுவின் உதவியுடன் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தை நிறுவன இயக்குனர் அருட்தந்தை செபஜீவன் அவர்கள் ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார். தொடர்ந்து அங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் புனித அந்தோனியார் திருச்சொருபம் ஆசீர்வதிக்கப்பட்டு கடலில் பவனியாக எடுத்து வரப்பட்டது.

பவனி நிறைவில் பங்குத்தந்தை அருட்தந்தை நிலான் யூலியஸ் அவர்களால் அச்சொருபம் கடற்கரை வளாகத்தில் நிறுவப்பட்டதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை பங்குமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் பொருட்டு ஒரு தொகுதி பயன்தரு மரக்கன்றுகளும் கடற்கரையில் நாட்டிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் வன்னி கரிதாஸ் கியூடெக் நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் திருமதி நேசநந்தினி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

'நாம் வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம். (உரோமையர் 14:8)

பிறப்பு 10 . 06 . 1948



இறப்பு 06 . 11 . 2023

குருவாக - 02.05.1974

அமரர்

## அருட்பணி. செ.யேசு இராஜநாயகம்

("அகவொளி" குடும்ப உளவள நிலைய ஸ்தாபகர்)

இளவாலை திராட்சையூரின் இரண்டாவது இறைகனி மண்ணில் மடிந்து விண்ணில் மலர்ந்து ஓராண்டு நிறைந்தும் தந்தையின் நினைவுகள் பணிகள் என்றும் எல்லாரின் மனதிலும் ஆழமாய் வேரூன்றியுள்ளது.

"அகவொளி" குடும்ப உளவள நிலைய ஸ்தாபகராகி பல குடும்பங்களை ஒளிர்வித்த அகவொளியாளனே இறைவனின் பாதத்தில் மலர்களாய் மலர்ந்து எமக்காக வேண்டுவீராக...

தந்தையின் ஓராண்டு நினைவில் 2024.11. 06 அன்று திருப்பலி இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
சகோதரர்கள்,பெறாமக்கள் மற்றும் மருமக்கள்

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



திருப்பாலத்துவ சபை மாணவர்களுக்கான ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பளை, புலோப்பளை புனித இராயப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜோர்ச் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரி பிரபாஜினி அவர்களின் உதவியுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் 104 மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இவ் உபகரணங்களுக்கான நிதியுதவி யாழ். மறைமாவட்ட **ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்** அவர்களின் வேண்டுகோளிற்கமைய மறை மாவட்ட திருத்தந்தையின் மறை பரப்பு சபையால் வழங்கிவைக் கப்பட்டது.

# தேசிய பிரான்சிஸ்கன் பொதுநிலை சபை நிர்வாக தெரிவு



இலங்கை தேசிய பிரான்சிஸ்கன் பொதுநிலை சபை உபதலைவராக யாழ். மறைமாவட்ட பிரான்சிஸ்கன் பொதுநிலை சபை தலைவர் சகோதரர் ஜெறி றெனோல்ட் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பிலுள்ள தலைமை காரியாலயத்தில் கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற நிர்வாக தெரிவின் போதே இவர் உபதலைவராக தெரிவாகியுள்ளார். யாழ். மறைமாவட்டத்தில் 90 ஆண்டுகளாக பணியாற்றிவரும் பிரான்சிஸ்கன் பொதுநிலை சபையிலிருந்து தேசிய சபைக்கு தமிழர் ஒருவர் தெரிவாகியுள்ளமை இதுவே முதல்முறை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# குருநகர் புனித யாகப்பர் ஆலய குண்டுத்தாக்குதலில் இறந்தோரின்31ஆம் ஆண்டு நினைவு



குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது இலங்கை விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத குண்டு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 31ஆம் ஆண்டு நினைவு தினம் 13ஆம் திகதி உணர்வுபூர்வமாக அங்கு அனுஷ்டிக்கப்பட்டது. இந்நாளில் பலியானவர்களை நினைவுகூர்ந்து அருட்தந்தை கனிசியஸ் ராஜ் அவர்களின் தலைமையில் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டவர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளும் அங்கு முன்னெடுக்கப்பட்டன. 1993ஆம் ஆண்டு இதே தினம் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது கிபிர் விமானங்கள் கண் மூடித்தனமாக மேற்கொண்ட தாக்குதலில் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மற்றும் விமான குண்டுதாக்குதலுக்குப் பயந்து ஆலயத்தில் தஞ்சமடைந்தவர்க ளென 9 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் பலரும் காயமடைந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பு றோ.க வித்தியாலயத்தில் ஒளி விழா

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோ.க வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒளிவிழா கடந்த 06ஆம் திகதி நடைபெற்றது. பாடசாலை அதிபர் அருட்தந்தை றொபின்சன் யோசப் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலியும் தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன. திருப்பலியை முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராகவும் அருட்சகோதரி ஹில்டா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்த அரங்க நிகழ்வில் அருட் சகோதரிகள், ஆசிரியர்கள், மாணவர்களென பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். புனித மடுத்தீனார் குருமடத்திற்கு தளபாடங்கள் கையளிப்பு



வன்னி கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட மாணவர்களுக்கான ஒரு தொகுதி தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த 01ஆம் திகதி நடைபெற்றது. குருமட முன்னாள் அதிபர் அருட்தந்தை ஜெயறஞ்சன் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் முகமாக நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் அவர்களால் இத்தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குருநகர் பங்கில் உறுதிப்பூசுதல்



குருநகர் பங்கில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் **பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்** அவர்களின் தலைமையில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 81 மாணவர்கள் உறுதிப் பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டனர்.

# ஒருங்கிணைந்த கிறிஸ்மஸ் பாடல் நிகழ்வு



யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவ பாடசாலைகள் இணைந்து முன்னெடுத்த 71ஆவது ஒருங்கிணைந்த கிறிஸ்மஸ் பாடல் நிகழ்வு கடந்த 09ஆம் திகதி யாழ். புனித பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது.

வட மாகாணத்தை சேர்ந்த ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவை இணைந்து முன்னெடுத்த இந்நிகழ்வில் 10 பாடகர் குழுக்கள் பங்குபற்றியிருந்தன.

இந்நிகழ்வில் கைதடி நவில்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.